DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.49/2016
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW4 (LW5)
Defence

Name : Murugan

Father Name /
Husband Name : Sadaiyandi

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 25th June 2026.

1 மற்றும் 3 ஆம் எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 4 எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியை கோட்டக்குப்பம் காவல் நிலைய த.காவலர் திரு.திருப்புகழ் என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

**முதண்மை விசாரணை**

நான் முருகம்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். அசா.1 முருகனை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றம் 2 கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய கையொப்பம் இலலை. வழக்க சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வழக்கின் எதிரிகளை தெரியாது. போலீசார் விசாரணையில் 30.12.2015 அனறு நானும் அசா.1 முருகனும் கொத்தனார் வேலை செய்வதற்காக திருக்கனூர் ரோட்டில் வாழப்பட்டாம்பாளையம் புதுவை ரூ திருக்கனூர் ரோடு சர்ச் அருகே சென்றபோது அங்கு போலீசார் நான்கு நபர்களை விசாரித்தார்கள் எனறும் எங்கள் முன்னிலையில அவர்களை விசாரித்து அவர்கள் பெயர் ராஜபிரியன், பாரத், முகேஷ் மற்றம் செல்வமணி என்று சொன்னார்கள் என்றும் அதில் ராஜபிரியன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் அதே இடத்தில் அன்று காலை 11.00 மணிக்கு ராஜபிரியன் அவர் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய 1 1/4பவுன் தங்கசங்கிலியை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும் அன்றைய தினம் 11.30 மணிக்கு எதிரி ராஜபிரியனிடமிருந்து பிஒய்01 பிஇசட் 3306 என்ற ஸ்கூட்டி பெப்ட் இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

sd/-XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.